**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின்**
**செயல் முறை ஆணை, சென்னை – 18.**

**முன்னிலை : திரு. ம. ரா. மோகன், இ.ஆ.ப., (ஓய்வு)**
**ஆணையர்.**

**ந.க.4135/2013/கூ.தே.1** **நாள் : 06.11.2014**

பொருள் : கூட்டுறவுத் தேர்தல் – புதுக்கோட்டை மாவட்டம் வெண்ணாவல்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் விருதுநகர் மாவட்டம் சேத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் – நிறுத்தப்பட்ட தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தலை மீண்டும் நடத்துதல் – புதிய தேர்தல் திட்டம் – அறிவிப்பு – தொடர்பாக.

பார்வை : கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநிலத் தேர்தல் அலுவலர் கடிதங்கள் ந.க.66655/2014/கூ.தே.2 நாள்:28.10.2014 மற்றும் 1.11.2014 (இரண்டு கடிதங்கள்).

****

**ஆணை:**

பார்வையில் காணும் கடிதங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்/மாநிலத் தேர்தல் அலுவலரால் அனுப்பப்பட்ட கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டன. புதுக்கோட்டை மாவட்டம் வெண்ணாங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் விருதுநகர் மாவட்டம் சேத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் ஆகியவற்றுக்கு ஏற்கெனவே நடத்துவதற்கு அறிவிக்கப்பட்டிருந்த தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல்கள் தேர்தல் அலுவலர்களால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை மற்றும் வழக்குகள் காரணமாக நிறுத்தப்பட்டது . தற்போது உள்ள சூழ்நிலைகளில் தேர்தல் நடத்த வாய்ப்பு உள்ளது என கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநிலத் தேர்தல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், புதுக்கோட்டை மாவட்டம் வெண்ணாவல்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் விருதுநகர் மாவட்டம் சேத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் ஆகியவற்றின் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல் எந்த நிலையில் நின்றதோ அந்த நிலையிலிருந்து தொடர்ந்து நடத்த 1988ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் விதி எண்.53 உபவிதி 11 (c)ன்படி கீழ்கண்டவாறு தேர்தல் திட்டம் வகுக்கப்பட்டு தொடர்புறுத்தப்படுகிறது.

–2–

**தேர்தல் திட்டம்**

| வ.எண். | திட்டம் | நாள் |
|---|---|---|
| 1. | மாவட்ட தேர்தல் அலுவலரால் தேர்தல் அலுவலர் நியமனம் செய்யப்படவேண்டிய நாள் : (விதி.எண்.53 1 (a)ன்படி) | 21.11.2014 |
| 2. | தேர்தல் அலுவலர், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிர்வாகக் குழு உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்ட அறிவிப்பு அனுப்பவேண்டிய நாள் : ( விதி எண்.53 3 (a)ன்படி | 24.11.2014 |
| 3. | தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுக்க நிர்வாகக்குழு உறுப்பினர்களின் கூட்டம் நடத்தப்படவேண்டிய நாள் : (விதி எண்.53 4(a)ன்படி) | 28.11.2014 |

2) 1988ஆம் வருடத்திய கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் விதி.எண்.53ல் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றியும், இவ்வாணையத்தால் தொடர்புறுத்தப்பட்டுள்ள சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளையும், தேர்தல் திட்ட கால வரையறைகளையும் பின்பற்றி இவ்விரு சங்கங்களின் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல்களை நடத்தி முடிக்க மாநிலத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது.

(ஒம்./–)
ஆணையர்

செயலாளர்

பெறுதல் :

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநிலத் தேர்தல் அலுவலர்.
2. சரக துணைப்பதிவாளர், அறந்தாங்கி / மாவட்ட தேர்தல் அலுவலர்.
3. சரக துணைப்பதிவாளர், திருவில்லிபுத்தூர் / மாவட்ட தேர்தல் அலுவலர்.
4. மண்டல இணைப்பதிவாளர் / புதுக்கோட்டை/மாவட்ட தேர்தல் பார்வையாளர்
5. மண்டல இணைப்பதிவாளர்/விருதுநகர்/மாவட்ட தேர்தல் பார்வையாளர்.